BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகரில் தங்கி, மகிழ்ந்து அனுபவியுங்கள்! ப்ராம்ப்ட்டன் மாநகரம் தனது முதலாவது சுற்றுலா யுக்தியை உருவாக்குகிறது**

ப்ராம்ப்ட்டன், ON (June 3, 2020) – ப்ராம்ப்ட்டன் மாநகரமானது புதிதாக முளைத்தெழுகின்ற சுற்றுலாத் தலமாகவும் கலாச்சார இடமாகவும் விளங்குகிறது; இதன் வகையில், ஆலோசகர்களான *பன்னிகின் டிராவல் & டூரிஸம்* மற்றும் *கலினரி டூரிஸம் அல்லையன்ஸ்* ஆகியோரால் உருவாக்கப்பட்டு வருகின்ற ஐந்தாண்டுக் கால சுற்றுலா வியூகத்தை அறிவிப்பதில் நகர நிர்வாகம் பெருமிதம் கொள்கிறது.

இதற்கான பணிகளில் சம்பந்தப்படுபவர்கள் குடியிருப்புவாசிகள், வருகை புரிபவர்கள் மற்றும் சுற்றுலா ஏற்பாடு செய்பவர்கள் ஆகியோராவர். இதில் உள்ளூரைச் சேர்ந்த உடல் சிலிர்க்க வைக்கும் ஜெயண்ட் வீல் எனும் ராட்சத ராட்டினங்கள் போன்றவற்றை இயக்குபவர்கள் , கலாச்சார நிறுவனங்கள், நிகழ்வு தயாரிப்பாளர்கள், தங்கும் விடுதி வழங்குபவர்கள் மற்றும் சிற்றுண்டி உணவக மேலாளர்கள் ஆகியோரின் உள்ளீடுகள் இந்த யுக்தியை உருவாக்குவதற்கு உதவும்.

இந்த உபாயமானது ப்ராம்ப்ட்டன் நகரின் சுற்றுலாத் துறையில் கோவிட்-19 தொற்றுபரவலின் தாக்கங்களுக்கு தீர்வு காண்பதுடன், உள்ளூர் சுற்றுலாவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளையும் அடையாளம் காணும்; இதன் மூலம் குடியிருப்புவாசிகள் தங்கள் ஊராகிய ப்ராம்ப்ட்டன் நகருக்குள் பயணம் செய்து தங்கள் சொந்த நகரம் எப்படி இருக்கிறது எனக் காணலாம். ஒன்ட்டேரியோ சுற்றுலாத் துறையின் குறுகிய கால பொருளாதார மீட்சிக்கு, ஒன்ட்டேரியோ பிரதேச சுற்றுலா தகவல் சங்கத்தின் கூற்றுப்படி, உள்ளூர் மற்றும் பிராந்திய சுற்றுலாத்துறைதான் ஒரு முக்கிய பங்களிப்பு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த யுக்தியானது, நகரத்தின் கலாச்சார மாஸ்டர் திட்டம், பொருளாதார மேம்பாட்டு யுக்தி மற்றும் சமீபத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட பொருளாதார மீட்பு யுக்தி ஆகியவற்றுடன் ஒருமிக்கும். ஒவ்வொரு யுக்தியும் கலை, கலாச்சாரம் மற்றும் சுற்றுலா ஆகிய பகுதிகளில் நெகிழ்ந்து கொடுக்கிற மற்றும் போட்டி நிறைந்த ப்ராம்ப்ட்டன் நகரின் எல்லைக்கற்கள் என அங்கீகரிக்கப்படுகிறது.

BRAMPTON

**Media Release**

2020 ஆண்டில், ப்ராம்ப்ட்டன் நகர் மன்ற குளிர்கால கூட்டத்தொடரில், ப்ராம்ப்ப்ட்டன் நகரின் முதலாவது சுற்றுலா யுக்தியை சமர்ப்பிக்க இலக்கு கொண்டுள்ளது. புதிய தகவல்களுக்கு வருகை தரவும் www.brampton.ca/tourism .

**பன்னிகின் ட்ராவெல் & டூரிஸம் நிறுவனம் பற்றி**

*பன்னிகின் டிராவல் & டூரிஸம்* என்பது டோரோன்ட்டோவை தளமாகக் கொண்ட ஒரு ஆலோசனை வழங்கும் நிறுவனமாகும்; இது சுற்றுலாத்தலங்களின் மேம்பாடு, பிரயாணம் செய்வதற்கான தொழில் மேம்பாடு, ஊடக உறவுகள் மற்றும் பொருளடக்கம் கொடுத்தல் , சுற்றுலா மற்றும் பொறுப்பான பிரயாணங்கள் ஆகியவற்றில் சுற்றுலா தலத்தின் சரித்திரம், மக்கள், அவர்களின் கலாச்சாரம், உணவு மற்றும் பொழுதுபோக்கு ஆகிய அனைத்தையும் அனுபவிக்கும் வகையிலான சுற்றுலா ஏற்பாடு செய்தல் மற்றும் சுற்றுலாத்தலத்தின் இங்கிதம் அறிதல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றதுமான நிறுவனமாகும்.

*விசிட் ஓக்வில், சிட்டி ஆஃப் ஓரில்லியா* மற்றும் *கிரே கவுன்ட்டி* ஆகிய இம்மாதிரியான சுற்றுலா திட்டங்களுக்கு *பன்னிகின்* நிறுவனம் சமீபத்தில் ஆதரவளித்துள்ளது. தற்போது *பீட்டர்பரோ & கவர்த்தாஸ்* மற்றும் *ப்ரின்ஸ் எட்வர்ட் கவுன்ட்டி* ஆகிய சுற்றுலாத்தல திட்டங்களுக்கான மீட்பு யுக்திகள் குறித்து ஆலோசித்து வருகிறது.

**கலினரி டூரிஸம் அல்லையன்ஸ் பற்றி**

*கலினரி டூரிஸம் அல்லையன்ஸ்* நிறுவனமானது, டோரோன்ட்டோவை தளமாகக் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற சுற்றுலா சார்ந்த உணவு மேம்பாட்டு அமைப்பாகும். உணவு மற்றும் பானம் தொடர்பான தொழில், மற்றும் சுற்றுலாப் பயணத் தொழில் ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதே இதன் செயல்திட்டமாகும், சுற்றுலாத்தலங்கள் சார்ந்த உணவு மற்றும் அதன் மேம்படுத்தலுக்கான உலகளாவிய முன்னணியாளராக தொடர்ந்து இருப்பதுவே இந்த அமைப்பின் தொலைநோக்கு பார்வைக்கான செயல்திட்டமாகும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ ப்ராம்ப்ட்டன் நகரின் முதலாவது சுற்றுலா யுக்தி உருவாக்கத்தினை ஆதரிப்பதில் நான் பரவசமடைகிறேன். இந்த யுக்திக்கான பணிகளைத் தொடங்குவது என்பது, எங்கள் நகரம்

கோவிட்-19 தொற்றுப் பரவலின் காரணமான நெருக்கடியிலிருந்து மீள உதவும் ஒரு மைல்கல் ஆகும். எங்கள் சமூகம் திறமைகொண்டவர்களால் நிறைந்துள்ளது, மற்றும் எங்கள் நகரில் மறைந்திருக்கும் பொக்கிஷங்கள் ஏராளம்; இவற்றை மகிந்து அனுபவிக்க அனைவரையும் ப்ராம்ப்ட்டன் நகருக்கு அழைக்கிறேன்!"

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் நகரத்தின் முதலாவது சுற்றுலா வியூகத்தை வகுக்க, ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள், நகர வளர்ச்சியில் பங்கு பெறுவோர் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியோர் ஒன்றிணைகிறார்கள். நீண்டகால பொருளாதார மீட்சிக்கான தீர்வுகளுக்கு உருக்கொடுப்பதில் ஈடுபாடு காட்டுவது என்பது முக்கியமானது, குறிப்பாக இந்த தொற்றுநோயிலிருந்து நாம் விடுபட்டு எழுவதால். ப்ராம்ப்ட்டன் நகரை, குடியிருப்பாளர்கள் மற்றும் வருகைதருபவர்கள் ஆகிய இருதரப்பினருக்கும் ஒரே மாதிரியான ஒரு சுற்றுலா தலமாகவும் கலாச்சார களமாகவும் முன்னிலைப்படுத்துவதை நான் எதிர்நோக்குகிறேன் ."

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, ப்ராம்ப்ட்டன் மாநகரம்; தலைமை பொறுப்பு, பெருநிறுவன சேவைகள்*

" *ப்ராம்ப்ட்டன் நகரமானது கலை மற்றும் கலாச்சாரம் நிறைந்த ஒரு துடிப்பான நகரம் ஆகும். எங்கள் வணிகங்கள், நிகழ்த்து கலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவை இந்த பெரிய நகரத்தின் ஒரு சில அம்சங்கள் மட்டுமேயாகும். ப்ராம்ப்டன் நகரின் முதலாவது சுற்றுலா யுக்தியானது, கோவிட்-19 தொற்று பரவல் முடிந்த பிறகான பொருளாதார மீட்சிக்கு நம்மை வழிநடத்தும், மேலும் அது ஏற்கத்தக்கதகுதி கொண்ட எங்கள் சமூகத்தின் மீது வெளிச்சம் போட்டுக் காட்டி பிரகாசிக்கச் செய்யும்.*"

- *ரொவீனா சாண்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ட்டன் மாநகரம், துணைத் தலைமை பொறுப்பு, பெருநிறுவன சேவைகள்*

"ப்ராம்ப்ட்டன் நகரில் சுற்றுலாவுக்கு ஒரு வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்காக *சிட்டி ஆஃப் பிராம்ப்டன் டூரிஸம் அண்ட் ஃபிலிம் ஆஃபிஸ்* எனும் அமைப்பானது, *பன்னிகின் டிராவல் & டூரிஸம்* மற்றும் *கலினரி டூரிஸம் அல்லையன்ஸ்* ஆகிய தொழில் வல்லமை கொண்ட அமைப்புக்களை கூட்டாக ஈடுபடுத்தியுள்ளது. இந்த சுற்றுலா யுக்தியானது, ப்ராம்ப்ட்டன் நகருக்கான குறுகிய மற்றும் நீண்ட கால வளர்ச்சிக்கான பாதையை அமைக்கும்; பொருளாதார மீட்சிக்கான உபாயத்துடன் ஒருங்கிணையும் விதமாக பொருளாதார மீட்சி மற்றும்

அதிகளவிலான உள்ளூர் செயலாடுகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தி இதனைச் செய்யும்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca